www.Padasalai.Net www.CBSEtips.in

KK12T

கன்னியாகுமரி மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

-----

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

3) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4) பதிலிடு பெயர்களில் பொருந்தாததைக் கண்டறிக.

அ) அவன் ஆ) அவள் இ) அவர் ஈ) இவர்

5) 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை

6) 'அஞ்ஞாடி' என்னும் புதினம் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு

அ) 2014 ஆ) 2004 இ) 2008 ஈ) 2018

7) வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - எனப்பாடியவர்

அ) சுரதா ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சிற்பி

8) **பொருத்தி விடை தேர்க.**

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய்; புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

9) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம் - காரணம்

அ) நேரடி மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியின் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

10) கதழ்கோல் உமணர் காதல் மடமகள்

சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி - என்னும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்

அ) நெடுநல்வாடை ஆ) கம்பராமாயணம் இ) அகநானூறு ஈ) புறநானூறு

Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net . www.CBSEtips.in



11) அக்ஷராப்பியாசம் என்பது ...........

அ) கல்விப்பயிற்சி ஆ) எழுத்துப்பயிற்சி இ) ஆங்கிலப்பயிற்சி ஈ) கணக்குப் பயிற்சி

12) மக்கள் இலக்கியமாகப் போற்றப்படும் நூல்.

அ) கம்பராமாயணம் ஆ) திருக்குறள் இ) தேவாரம் ஈ) தெய்வமணிமாலை

13) 'வளைஇ' என்பதன் இலக்கணக் குறிப்பு..........

அ) பண்புத்தொகை ஆ) வினையெச்சம்

இ) சொல்லிசை அளபெடை ஈ) உருவகம்

14) சாலைப் போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் ...........

அ) 100 ஆ) 108 இ) 198 ஈ) 103

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16) ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

17) நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

18) 'சுரதா' பெயர்க்காரணம் கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

20) மையாடல் விழா என்றால் என்ன?

21) ஆற்றங்கரைப் படிவு என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணுநாளா சிரமப்படுது

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) அமர்ந்தான் ஆ) விளங்கி

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) செந்தமிழே ஆ) எத்திசை

25) **கலைச் சொல்லாக்கம் தருக.**

அ) Take off ஆ) Visa

**காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

பலகை.

26) **மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில ............

ஆ) உண்ணாது நோற்பார் ..............

27) **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் யார் மனம் வரும்.

28) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

29) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. அலை, அளை, அழை

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



30) உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) தாமரை இலை நீர்போல

ஆ) அச்சாணி இல்லாத தேர்போல

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31) 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33) சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

34) வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

36) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37) பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்கம் தருக.

38) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

39) அ) நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்

- நாமக்கல் கவிஞர்

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

அ) யானைக்கும் அடி சறுக்கும்

(அல்லது)

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42) அ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

(அல்லது)

ஆ) வாகை திணையைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



43) தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary he was something more than that. He is known as a great Champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal difference in our society were deep - tooted and appeared to be permanent feature of our society until periyar came on the scence.

43) காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு நாராசம் என்று பெயர். சுவடியைக் கோக்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தட்டையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்து அமைப்பார்கள். அதற்குக் கிளிமூக்கென்று பெயர். எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. மடக் கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர்.

**வினாக்கள்:**

1) நாராசம் என்றால் என்ன?
2) கிளிமூக்கு என்பது யாது?
3) எழுத்தாணியின் வேறுபெயர் யாது?
4) எழுத்தாணியின் வகைகள் யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

45) அ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

46) அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை.

(அல்லது)

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி - V

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

அ) குகனோடும் ............ எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- - - - - - -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner